1979 அக்டோபர் 30]

[பிற்பகல் 1—30.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி யோடு, பேரவையை இன்னும் 15 நிமிடங்களுக்கு நீட்டிக்கிறேன். இதற்கு மேல் பசி தாங்காது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் கட்சியிலே 25 பிளஸ் 15, மொத்தம் 40 நிமிடங்கள் தான் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய பேசியிருக்கிறார் கள். விவரங்கள் தருகிறேன். 15 நிமிடங்களுக்கு மேல் பசி தாங்காது. எனவே, அதற்குள் நீங்கள் முடித்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலை வர் அவர்களே, 3 ஆம் தேதி முதல் அமைச்சர் அவர்கள் இங்கே வரயிருக்கிறார்கள். அப்போது பேசினால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலில் பேச ஆரம்பிக்கவேண் டும். நீங்கள் ஒத்துக்கொண்டால், எனக்கு ஆட்சேபணை ஒன்றுமில்லை.

(எதிர்க்கட்சித் தலைவர் தன் இசைவைத் தெரிவித்தார்.)

அப்போது சரி.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

169. திருவொற்றியூர் 5 ஆம் எண் நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி நகர் வளர்ச்சித் துறையின் 30 4—1979 ஆம் தேதியிடப்பெற்ற 712 ஆம் எண்

அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர ஊர் அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

170. சென்னை, மாநகர, பூந்தமல்லி நெடுஞ்சாலை நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி நகர் வளர்ச்சித் துறையின் 6-4-1979 ஆம் தேதியிடப் பெற்ற 625 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

171. சென்னை, நுங்கம்பாக்கம் மேற்கு பகுதி II நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 4-4-1978 ஆம் தேதியிடப் பெற்ற 540 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

172. தொழிலாளர் நலத் துறையிலுள்ள இரசாயன பரிசோதகர் பதவியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் தமிழ்நாடு பொது சார்நிலை பணியில் சேர்ப்பதன் பொருட்டு, தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, பணியாளர் நிர்வாக சீர்திருத்தத் (பணியாளர் M) துறையின் 30–7–1979 ஆம் தேதியிடப்பெற்ற 884 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
21 JUN 1980
MADRAS-600 009